NAR. 38.

# சாரணர்

சென்னை ராஜ்ய கல்வி இலாகாவினர் அங்கீகரித்த மாத சஞ்சிகை.

334
1058
1-55
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 FEB 1955
MADRAS




பச்சிமாரி அகில இந்திய சாரணப் பயிற்சி ஆணையாளர்கள் மகாநாட்டில்
நம் அகில இந்திய சாரணத் தலைவர்களில் மூவர்.

(a) பண்டிட் ஹிருதய நாத் குன்சரு—அகில இந்திய பிரதம கமிஷனர்.
(b) ஜஸ்டிஸ் விவியன் போஸ்—பிரதம கமிஷனர்.
(c) ஹர்தியால் சிங்—இந்திய சாரணப் பயிற்சி பிரதம கமிஷனர்.

காரியாலயம் :
1, வடக்காவணி மூலவீதி,
மதுரை.

தனிப் பிரதி அணா 2.

223962



ரோடரி ஆயில் மில்.

# "S.K.F."

## ரிங் ஆயில் பேரிங் & ரோலர் பேரிங் மாவு மில்கள்

எங்களிடம் கைதேர்ந்த மெக்கானிக்குகளைக் கொண்டு தயார் செய்யப்பட்ட

1. ஆயில் எக்ஸ்பெல்லர்கள்
2. பில்டர் பிரஸ்கள்
3. ரோடரி ஆயில் மில்கள்
4. கரும்பாலைகள்
5. பேலிங் பிரஸ்கள்
6. பேப்பர் கட்டிங் & பன்சிங் மெஷின்களும்

அத்துடன்

மோட்டார் & பம்பு செட்டுகள், இங்கிலீஷ் மேக் பெலபோன், பிளாக்ஸ்டோன் & நாஷனல், ஜப்பான் யான்மார் குரூட் ஆயில் என்ஜின்களும் பெட்டர் ஆயில் என்ஜின்களும் கிடைக்கும்.

Tel: பவுண்ட்ரி.

## ஸ்ரீ கிருஷ்ண பவுண்ட்ரி,

சுப்பிரமணியபுரம், மதுரை.

# சாரணர்

நிர்வாக ஆசிரியர்:
ஜே. டி. ஆசிர்வாதம்

| ஜய, மாசி | 38 | 1955 பிப்ரவரி |
|---|---|---|


அன்பர்பணி செய்ய எனையாளாக்கி விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.

— தாயுமானவர்.


| பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|
| பேதன் பவுல் பிறந்ததினம் | .... | 2 |
| பத்திராதிபரின் குரல்? | .... | 3 |
| அகில உலக எட்டாவது திரள் சாரணர் களியாட்டு | .... | 4 |
| காயப்பட்டவரைத் தூக்கிச்செல்லுதல் / கயிற்றில் ஏணி தயாரித்தல் | .... | 5 |
| சாரணீய விளையாட்டுகள் | ரா. சுந்தரம் | 6 |
| திரிசாரணர் பயிற்சிக் குறிப்புகள் | R. S. & M. S. P. | 8 |
| வினாக்களும், விடைகளும் | .... | 11 |
| எங்கள் இலங்கைப்பயணம் | 'புரு' | 12 |
| செய்திகள் | .... | 16 |

சாரணர் இயக்க ஸ்தாபித்தவரான

## ஸர் ராபர்ட் பேதன் பவுல் பிரபு

பிறந்த தினம்

பேப்நுவரி 22ம் தேதி உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்த நாளில் ஏதாவது சாரணர் கூட்டம், அல்லது ராலி, பாடித் தீ விளையாட்டு முதலியவைகள் வைத்து கொண்டாட யோசனை கூறுகிறோம்

## "சாரணர்" விளம்பர விகிதம்.

| | முழுப்பக்கம். 1 முறை | முழுப்பக்கம். 12 முறை | அரைப்பக்கம். 1 முறை | அரைப்பக்கம். 12 முறை |
|---|---|---|---|---|
| அட்டை 4-ம் பக்கம் | ரூ. 50. | ரூ. 500. | ரூ. 30. | ரூ. 300. |
| 2, 3-ம் பக்கம் | ரூ. 30. | ரூ. 300. | ரூ. 20. | ரூ. 180. |
| உள் பக்கம் | ரூ. 20. | ரூ. 200. | ரூ. 12. | ரூ. 100. |
| கால்பக்கம் | ரூ. $7\frac{1}{2}$. | ரூ. 60. | | |

சிறு விளம்பரங்களுக்கு ஒருபத்தி அங்குலம் 1-க்கு ரூ. 2.

# பத்திராதிபரின் குரல்?

**இதை வாசிக்கும் நேயர்களுக்கு!**

"சாரணர்" பத்திரிகை தோன்றி மூன்று ஆண்டுகள் நிறைந்து நான்காவது ஆண்டில் இவ்விதழ் இரண்டாம் வெளியீடாக வருகிறது. தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தமிழருக்கென்று வெளிவரும் சாரணப் பத்திரிகை இது ஒன்றே என்று கூறுவது மிகையாகாது. இதுவும் பற்பல இடறல்களில் சிக்கி சில மாதங்கள் நின்று போனாலும், தொடர்ந்து நடத்துவதென்று மதுரை ஜில்லா சாரணர் சங்கம் தகுந்த ஏற்பாடுகள் செய்துளது. அறிஞர் பலர் விஷயதானம் அளித்தும், பத்திரிகை வாங்கி வாசித்தும் உற்சாகமளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு எமது நன்றி. அநேகர் எழுத்து மூலம் தெரிவித்தபடி . இப்பத்திரிகை சாரணர் யாவருக்கும் மிகவும் பிரயோஜனமான விஷயங்களை வெளியிடுவதாக இருப்பதால் நல்ல முறையில் ஒழுங்காக வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய யோசனைக்கும் மிக நன்றி. இயன்ற வரை முயலுவோம் என்றும் வாக்குக் கொடுக்கிறோம். இந்த வாக்குறுதி நிறைவேறுவதற்கு வாசகர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் தேவை.

முதலாவது சாரணர்களுக்கு உபயோகமான குறிப்புகளை எழுதி அனுப்புவதோடுகூட அதற்கு ஏற்ற படங்களை அல்லது Sketch அனுப்பி வைக்கவும். அங்கங்கே நடக்கும் செய்திகளை அவ்வப்போது இப்பத்திரிகையில் வெளியிடவும் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது பத்திரிகையை வாசிப்பதற்கு ஏராளமானவாசகர்கள் இல்லாவிடில் எழுத்தாளர்களின் எழுத்தும் பிரயாசமும் பயனற்றதாகப் போய்விடும் என்றஞ்சுகிறோம். ஆகையால் இப் பத்திரிகையை வாங்கி வாசிக்கும் சந்தாதார்கள் இவ்வருஷம் ஒவ்வொருவரும் முயற்சித்து புதிய சந்தாதார்களைச் சேர்த்துத் தொகையை அதிகரிக்க முயற்சி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். அதிகமாக சந்தாதார்கள் சேர்ந்தால் இதை இன்னும் சிறந்த முறையில் நடத்த உற்சாகமேற்படும்.

அதோடு பத்திரிகையின் சந்தா மிகவும் குறைவாய் வைத்திருக்கிறபடியால் Advertisement இல்லாவிடில் அதிக நஷ்டமடைய நேரிடும். ஆகவே நேயர்களின் ஒத்துழைப்பு (Advertisement) விளம்பரம் வாங்கித்தந்து உதவும் பணி ஒன்றாகும்.

இம்மாத பத்திரிகையில் கேள்விக்கு பதில் என்று ஒரு புதிய பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. வாசகர்கள் சாரணர் வேலையின் சம்பந்தமான ஐயவினாக்களை எழுதி அனுப்பினால் அவைகளுக்குத் தகுந்த ஐயநிவிர்த்திவிடை இந்த பத்திரிகையின் வாயிலாக வெளிவரும்.

பொதுவான விஷயங்கள் வெளி வருகிற பத்திரிகைகளின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறபடியால் இப்பத்திரிகையில் சாரணர் வழிகாட்டிப் பெண்களுக்கு ஏற்ற விஷயங்களையே வெளியிடவேண்டுமென்கிற யோசனையை மேற்கொண்டிருக்கிறோம். அநேகர் இதற்கு ஒத்தாசை செய்ய முன்வந்திருக்கிறார்கள். இன்னும் அநேகர் முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.

1955ம் ஆண்டிலாவது அநேகர் சந்தாதார்களாய் சேர்ந்து எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். தமிழ் நாட்டிலுள்ள எல்லா சாரண ஸ்தல ஸ்தாபனங்களும் இதில் ஒத்துழைத்தால் சீக்கிரத்தில் இம்முயற்சி வெற்றிகரமாக முடியும் என்பதில் சந்தேகமே இல்லை.

---

## அகில உலக எட்டாவது திரள்சாரணர் களியாட்டு.

**தேதி:** 1955ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 18ம் நாள் முதல் 28ம் நாள் வரை அகில உலக எட்டாவது திரள் சாரணர் களியாட்டு.

**இடம்:** கனடாவிலுள்ள நயகரா நீர்வீழ்ச்சியின் பகுதியில் நடைபெற இருக்கிறது.

**செலவு:** ஒருவர் பம்பாயிலிருந்து சென்றுவர ரூ. 5650 ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திரள்சாரணர் களியாட்டில் கலந்துகொள்ள விரும்புவோர்கள் எழுதி தெரிந்துகொள்ளலாம். பம்பாயிலிருந்து புறப்படும் தேதி ஜுலை 16.

---

## 1955ம் ௵ இனாம்!

'சாரணர்' பத்திரிகைக்கு புதிய சந்தாதாரைச் சேர்த்துக் கொடுங்கள்!

உங்களில்


5 புதிய சந்தாதாரைச் சேர்ப்பவர்களுக்கு ஸ்ரீராம்பாஜ்பாய் அவர்கள் படம் இனாம்
10 புதிய சந்தாதாரைச் சேர்ப்பவர்களுக்கு 1955௵ பாரத் சாரணர் நாட்குறிப்பு ,,
15 புதிய சந்தாதாரைச் சேர்ப்பவர்களுக்கு 1955 வருடம் முழுவதும் "சாரணர்" பத்திரிகை இனாம்.

இந்தப் பரிசுத் திட்டம் 1955 ௵ பிப்ரவரி முடிய அமுலிலிருக்கும். பரிசு பெற்றவர்களின் பெயர்கள் 'சாரணர்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**'சாரணர்' பத்திரிகை சந்தா ஒரு வருடத்திற்கு ரூ. 1—0 0 தான்.**

நிர்வாக ஆசிரியர்.

# காயப்பட்டவரைத் தூக்கிச் செல்லுதல்.



நான்கு கை ஆசனம் மூன்று கை ஆசனமும் கைப்பிடி வசதியும்.

இரு சாரணர் தங்கள் கரங்கள் நான்கையும் படத்தில் காட்டியவாறு ஒவ்வொருவரும் தன் இடது மணிக்கட்டை வலது கையால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, இடது கையால் அடுத்தவரின் வலது கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டால் நான்கு கை ஆசனமாகும். நோயாளியானவர் வைத்தியசாலை போகும் வரை சாய்ந்துகொண்டிருப்பது நலமென்று தெரிந்தால் முன்போல ஒருவர் தன் இடது மணிக்கட்டை வலது கையால் பிடித்துக்கொண்டு அடுத்தவரின் வலது கையைத் தன் இடது கையால் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும். அடுத்தவர் தன் இடது கையால் தன் தோழரின் வலது தோளைப் பிடித்துக்கொண்டால் சாய்மான வசதியை நோயாளிக்கு அளிக்கலாம்.

---

# கயிற்றில் ஏணி தயாரித்தல்.

ஒவ்வொரு சாரணனும் தன் தோள்பட்டைத் துணியையாவது கழுத்துக் குட்டையையாவது எடுத்து, இரு முனைகளை முடிச்சின் மூலமாக இறுக்கி, ஒரு வளையமாக்கி, பிறகு ஒவ்வொரு வளையத்தையும் சங்கிலி மாதிரி முடிச்சின் மூலமாகப் படத்தில் காட்டியபடி இணைத்தால் அது ஒரு பலமான கயிறாகவும், ஏணியாகவும் விளங்கி சாரணரின் சேவைக்கு உதவி செய்யும்.

# சாரணீய விளையாட்டுகள்.

ரா. சுந்தரம், டால்மியாபுரம்.

16. பொக்கிஷ வேட்டை:— சிலர் முதலில் வழிக்குறி அடையாளங்கள் அல்லது நூல் காகிதத் துணுக்குகளை விட்டுச்செல்ல வேண்டும். மரங்கள், செடிகள் இவைகளிலும் அடையாளங்கள் செய்யலாம். திசை மாற்றங்களை அந்தந்த இடங்களில் தெரிவிக்க வேண்டும். முடியும் இடத்தில் சாப்பிடும் பண்டங்களான பழம், நிலக்கடலை, பெப்பர் மிண்டுகள் போன்றவற்றை மறைத்துவைக்கவேண்டும். அணித் தலைவர்கள் இதை நன்கு திட்டமிட்டு செய்யலாம். பின்பற்றுபவர்கள் இந்த அடையாளங்கள் மூலம் சென்று பொக்கிஷத்தைக் கைப்பற்ற வேண்டும். கடைசியில் செல்லும் சாரணன் குறிகளை அழித்து விடவேண்டும் புதையலைப் பள்ளம் தோண்டியும், செடிகளுக்கூடேயும் வைக்கலாம். பூச்சிகள் இருக்கக் கூடிய புதர்களில் மறைத்து வைத்தல் தகாது. குறிகள் புதையல் இருக்குமிடத்திற்கு சற்று தூரத்திலேயே நின்றுவிடவேண்டும்.



பயிற்சியாளர்களுக்கு தாமஸ் அம்மையார் பயிற்சிப் பத்திரம் வழங்கல்.

17. சேக்கு விளையாட்டு:—சாரணர்களில் இரண்டு அணிகளை சிறு வட்டமாக உட்காரவைத்துக் கொள்ளவேண்டும். முழங்கால்களை சிறிது மடக்கி கால்களை நீட்டி பாதங்களைச் சேர்த்து உட்கார வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு சாரணன் நிற்க இட வசதி இருக்க வேண்டும். ஊதல் கொடுத்தவுடன் நிற்கும் சாரணன் கைகளைக் கட்டிக்கொண்டு உறுதியாக முன்பக்கமோ, பின்பக்கமாகவோ அல்லது பக்க வாட்டிலேயோ சாரணர்கள் மேல் சாயவேண்டும். சாரணர்கள் அவர்கள் மேல் அந்த சாரணன் விழாதபடி கை கொடுத்துத் தாங்கி ஒருவனிடமிருந்து மற்றொருவனிடமுமாக மாற்றிச் சுற்றியோ அல்லது ஒருவருக்கொருவர் வட்டத்தின் குறுக்காக அவனைச் சாய்த்துவிட்டுத் தாங்கி அவனைக் கீழே விழாதபடி தடுப்பார்கள். தவறி எவன் விட்டு


விடுகிருனே அவன் மத்தியில் போய் நின்றுகொள்ள வேண்டும். ஆட்டத்தை முன்போல் செய்ய வேண்டும்.

18. செய்திகொண்டு செல்லுதல்: ஞாபக சக்தி விளையாட்டு:- நான்கு அணிகளை சிறிது இடம் விட்டு நிறுத்திவைக்க வேண்டும். முதலில் நிற்பவனிடம் சாரண ஆசிரியர் ஒரு செய்தியைச் சொல்லுவார். அவன் அடுத்தவனிடம் சென்றுகூற வேண்டும். இப்படி மாறி மாறி செய்தி செல்லும். கடைசியில் உள்ளவன் அச்செய்தியைப் பெற்றுத் தனிக் காகிதத்தில் எழுதித் தலைவரிடம் கொடுக்க வேண்டும். மார்க்குகள் கொடுக்கலாம். முதன்மையும், பிழையின்மையும் கவனிக்கப்பட வேண்டும்.

19. சமாச்சாரம் கொண்டு செல்லுதல்:— Despatch Running:- சாரணன் ஒருவன் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு அல்லது நபருக்கு குறித்த காலத்திற்குள் ஒரு கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுக்கச் செய்யலாம். அணித் தலைவன் இவன் செல்லும் வழியில் இதர சாரணர்களைக் காவல் வைத்தும், வரும் வழியில் காவல் வைத்தும் இவனைப் பார்த்துவிடச் செய்வான். யாவரும் இவன் செல்லுமிடத்திற்கு 200 கெஜ தூரத்திற்குள் நிற்கக் கூடாது. தபால் கொண்டு செல்பவன் எவ்வித வேஷத்திலும் வரலாம்; நடந்தோ, சைக்கிளிலோ, வாகனங்களிலோ வரலாம். இரண்டு சாரணர்கள் அவனைத் தொட்டு விட்டால் பிடிபட வேண்டும்.

20 தொடர்தல் விளையாட்டு:— (Stalking Game) ஒரு சாரணனை வெளியே அனுப்பி மறைந்துகொள்ளச் சொல்ல வேண்டும். அவன் தன்னை எவ்விதம் வேண்டுமானாலும் மறைத்துக் கொள்ளலாம். ஒரு எல்லையைக் குறிப்பிடவேண்டும். மற்ற சாரணர்கள் அவனைக் கண்டுபிடிக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் எல்லையை அடைந்துவிட்டால் அவன் ஜயித்தவனாவான்.

(தொடரும்)



பச்சிமாரியில் நாங்கள் தங்கியிருந்த வசதியான சர்க்கார் விடுதி.

# திரிசாரணர் பயிற்சிக் குறிப்புகள்.

R. சுந்தரம், வித்வான். M. S. பஞ்சகேசன், டால்மியாபுரம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதுகாறும் திரிசாரணீயத்தைப் பற்றிய பொதுவான சில குறிப்புகளை எழுதினோம். இனிக்குறிப்பாக திரிசாரணக்குழு அமைப்பு முறையும், நிர்வாக நியதியும், தேர்ச்சித் திறமையும் ஆகியவற்றை இயன்றவரை சுருங்கிய அளவில் சொல்லுவோம்.

## 1. நோக்கங்களும், குறிக்கோளும்:

(1) வாலிபர்களையும், மாணவர்களையும் நன்னடத்தையில் பழக்கி, தாய்நாட்டின் சேவைக்கும், சகோதரர்களுக்கு உதவி செய்யவும் தயாராக இருக்கும் சிறந்த பிரஜைகளாகத் தயாரித்தல்.

(2) பாலவீரர்களுக்கும், சாரணர்களுக்கும் அளித்த பயிற்சியைப் பரந்த அளவிலும், வயதிற்கு ஏற்றபடியும் கொடுத்தல்.

(3) தங்களுக்கு உபயோககரமான ஒரு தொழிலை மேற்கொண்டு அதன் மூலம் தாய் நாட்டிற்குத் தொண்டு செய்தல்.


(4) தேகபலம், மனோபலம், பரிசுத்தம் இவற்றை வளர்க்கப் பாடுபடுதல்.

(5) சமூக வாழ்க்கையைப் பற்றியறிதல்.

(6) சாரண இயக்கத்திற்கு வேண்டிய தலைவர்களைத் தயாரித்தல்.

குறிக்கோள் :-

"அன்புத்தொண்டு" (Service)



மாநாட்டு பிரதிநிதிகள் பச்சிமாரியில் ஒவ்வொருநாளும் பல இடங்களுக்குச் சென்று பல புதிய இடங்களைப்பார்வையிட்டனர். இந்தப்படம் அதில் ஒரு பகுதி.

## 2. சேருவதற்குள்ள நிபந்தனைகள்:

(1) சாதாரணமாக 17 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

(2) திரிசாரணத் தலைவராலும், குழுவினராலும் அங்கிகரிக்கப்பட வேண்டும்.

(3) சாரண வாக்குறுதி, சட்டம், குறிக்கோள் இவற்றில் கூறப்பட்டுள்ளபடி அநுபவபூர்வமான சாரணீயத்தை அறிந்து திறந்த வெளி வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்தி முன்னேற முயலவேண்டும்.

(4) சாரண ஆசிரியரால் சிபாரிசு செய்யப்பட்ட சாரணர்களும் சேரலாம்.

(5) தானாகவே தன் சொந்த முயற்சியினால் பிரவேச சோதனைக்குத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

## 3. திரிசாரணீயத்தில் பல படிகள்:

இத்திரிசாரணீயம் (i) சோதனை நிலை, (ii) பயிற்சி நிலை, (iii) ஊழிய நிலை என்ற முப்பிரிவினதாய் நடக்கும்.

## I. சோதனை நிலை :

(1) தேசியக்கொடி, சாரணக் கொடி இவற்றின் அவசியம், அமைப்பு, லக்ஷியங்களையறிதல்.


(2) சாதாரண சுலபமான கவாத்துக்கட்டளைகளை யறிதல்.

(3) "சித்திபெற சாரணீயம்" என்ற பேடன் பவல் எழுதிய நூலையோ, அல்லது "இந்தியச் சிறுவர்களின் சாரணீயம்" என்ற நூலையோ படித்தறிதல்

(4) சாரணீயச் சட்டம், குறிக்கோள், வாக்குறுதி முதலியவை தினசரி வாழ்க்கையிலும், தொண்டிலும் பயன்படும் விதத்தை அறிதல்.

(5) சாரணர்களை 'இளம்பாதர்" சின்னத்திற்கும், பால வீரர்களைப் "பூவடியான்" சின்னத்திற்கும் தயார் செய்யும்திறமை.

(6) மற்றொரு திரிசாரணத்தோழனுடன் நடந்தோ அல்லது படகிலோ 14 மைல்களுக்குக் குறைவில்லாத



பச்மோரியில் அதாவது சத்பூரா மலையில் மிகவும உயரமான டுப்கார் (4460 அடி உயரம்) என்னும் சிகரத்தில் பிரதிநிதிகள் ஏறும்காட்சி. நமது நாஷனல் கமிஷனர் குன்ஸுரூவும் இதன் உச்சியில் எங்களோடு ஏறிவந்தது போற்றத்தக்க காரியம்.

தொலைவிலுள்ள ஓர் இடத்தில் பாடியமைத்தல். அந்தப் பாடியில் தனக்கும், தன் தோழனுக்கும் வேண்டிய உணவைத் தானே தயார் செய்து கொள்ளல், கூடாரத்திற்கும் மற்ற தேவைகளுக்கும் வேண்டிய கருவிகளைக் கையில் எடுத்துச் செல்லுதல்.

(I) சாரணச்சட்டம்:

(1) சாரணன் நம்பிக்கையுடையவன்.

(2) சாரணன் விசுவாசமுள்ளவன்

(3) சாரணன் கடவுளை வணங்குவதையும், தேசத்திற்கும் பிறர்க்கும் தொண்டு புரிவதையும் தன் கடமையாகக்கொள்வான்.

(4) சாரணன் எல்லோருக்கும் நண்பன்.

(மற்றைச் சாரணர்களுக்குச் சகோதரன்-சாரணனுக்கு ஜாதி, மதம், என்ற பேதம் கிடையாது.)

(5) சாரணன் பிராணிகளுக்குத் தோழன்.

(6) சாரணன் பணிவுள்ளவன்.

(7) சாரணன் ஒழுக்கமுள்ளவன், சட்டங்களுக்கு கீழ்படிந்து நடப்பான்.


(8) சாரணன் தைரியமுள்ளவன், எல்லாக்கஷ்டங்களையும் சந்தோஷமாகச் சகித்துக்கொள்ளும் தன்மையுடையவன்.

(9) சாரணன் சிக்கனமுள்ளவன்.

(10) சாரணன் எண்ணம், பேச்சு, செய்கை முதலியவற்றில் பரிசுத்தமுள்ளவன்.

[இவற்றை வாழ்க்கைச் சரிதங்களுடனும், சரித்திரச் சம்பவங்களுடனும் சம்பந்தப்படுத்தி அறிதல் வேண்டும்]

(தொடரும்.)



டூப்கார் சிகரத்திலிருந்து பச்சிமாரி பட்டணத்தின் காட்சி.

# வினாக்களும் விடைகளும்.

(1) மாவட்ட அடிப்படையில் சாரணப் போட்டிகள் அமைப்பது நல்லதா? எனஒரு ஆணையாளர் கேட்டுளார்.

பதில்: மாவட்ட அடிப்படையில் சாரணப் போட்டிகள் அமைப்பது செயல்முறையில் மிகவும் கஷ்டம் தரக்கூடியது. தக்க பலனும் இருக்காது என்று கருதுகிறோம். போட்டி அமைக்க வேண்டுமெனக் கருதினால் போட்டியில் கலந்து கொண்டவர்களனைவரும் மனநிறைவோடு செல்ல வேண்டும் என்பதை நினைவிற் கொண்டு மிகக் கருத்தாகத் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். விலையுயர்ந்த பரிசுகளை விலக்கவேண்டும். திட்டவட்டமான செயல்முறை தேவைப்படுமானால் மாகாண சாரண அமைப்பு ஆணையாளர் (S.O.C.) அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும்.

★

(2) பத்தாண்டுகட்குமுன் முந்திய நிறுவனத்தில் பயிற்சிபெற்ற பாலவீர ஆசிரியர்கள் இப்பொழுது பாலவீரத் தொகுதியை நடத்தலாமா? என பல பாலவீர ஆசிரியர்கள் கேட்கிறார்கள்.

பதில் :— கட்டாயம் நடத்தலாம். பாலவீரத் தொகுதி நடத்துவதிலே ஆர்வம் இருக்குமானால் நடத்தலாம். எனினும் குழந்தைகளின் நன்மையை முன்னிட்டு, நினைவளிப்புப் பயிற்சி (Refreshers' Course) பெற்று, மாறுதல்களையும் புதிய முறைகளையும் தெரிந்துகொள்வது மிகுந்த நலம்தரும். தயைசெய்து உங்கள் மாவட்ட ஆணையாளர் (D.C.)களுடன் தொடர்புவைத்துக்கொள்ளவேண்டுகிறோம்.

★

(3) சில சாரணர்கள் முதல்வகுப்புப் பயிற்சிக்கு (First Class Test) தயாராக இருக்கிறார்கள். ஆனால் எங்கள் அணி, சாரணத் தலைமையகத்தினின்றுவெகுதூரத்திலுள்ளது. விதிப்படி ஒரு சுயேச்சை தேர்வாளர்தான் (Examiner) தேர்வு நடத்த தகுதியுள்ளவர். இதற்கு யாருடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்? என ஒரு சாரண ஆசிரியர் கேட்கிறார்.

பதில் :— உங்கள் பகுதி மாவட்ட ஆணையாளருக்காவது (D.C.) அல்லது மாவட்டத் துணை ஆணையாளருக்காவது (A.D.C.) எழுதி, தேர்வு நடத்தும் தகுதிபெற்றசாரணரை அனுப்பச்சொல்லுங்கள்.

—

# எங்கள் இலங்கைப் பயணம்.

'புரு'

ஹார்வி திரிசாரணர் குழு, மதுரை.

(ஜனவரி இதழ்த் தொடர்ச்சி)

அநுராதபுரம் ஒரு அழிந்த நகரம். ஒரு காலத்தில் 16 மைல் நீளமும் 16 மைல் அகலமும் பரந்து கிடந்ததாம்! அங்கு 'பிரேஸன்' அரண்மனை ஆயிரம் அறைகளையும் ஒன்பது மாடிகளையும் கொண்டிருந்ததாம். இப்போது அந்த இடத்தில் 1600 அழகிய தூண்கள் தான் நிற்கின்றன. மானசீகமாக அந்த அரண்மனையின் அமைப்பைப் பார்த்துக் கொண்டேன். அதே மாதிரியாக அழிவை ஆட்கொண்ட அரண்மனைகள், பெரிய டகோபாக்கள் பல இருக்கின்றன. டகோபாக்கள் பழங்காலத் திறமைக்கும், கலைக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இப்போது அநுராதபுரம் புத்த மதத்தினருக்கு ஒரு புண்ணிய நகரமாக இருக்கிறது. அழிந்துபட்ட அந்நகரைப் பார்த்து அநுதாபப்பட்டேன், கண்களிலே நீர் நிறைந்தது.

"டேயப்பா! கனவிலுங்கூடச் சோகக் கதைக்குக் கற்பனை செய்கிறாயா? போதும்டா! கண்ணைத் திற! விடிந்து விட்டது! கண்ணுக்கெதிரே இருக்கும் இயற்கையை ரசி!" என்று தூக்கி உட்கார வைத்தார் நண்பர் ராமமூர்த்தி.

அநுராதபுரத்தைக் கனவில்தான் கண்டோமா? சரி! மற்றவர்களுக்கு



எட்கிரின் என்பவர் யுவபுரியில் பயிற்சியாளருக்குப் போதனை செய்தல்.

அதுகூடக் கிடையாதே என்ற திருப்தி உள்ளத்தே எழுந்தது!

வெளியே நோக்கினேன். எங்கும் பசுமை, சிறு சிறு குன்றுகள் அவைகளில் ஓங்கிவளர்ந்த தென்னைகள், நெருங்கிநின்ற இலைகளடர்ந்த மரங்கள், பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தன.


“டே! பசி காதடைக்கிறது. ஏதாவது வேண்டுமே. இராமசாமி அய்யரைப் பார்த்துக் கேளடா!” என்றார் ஒருவர்.

இராமசாமி அய்யர் தான் என்ன செய்வார்? புகைவண்டி நிலையங்கள் பல வந்து சென்றன. ஆனால் ஒன்றிலாவது நாங்கள் எதிர்பார்த்த இட்லி, தோசை, உப்புமா கிடைக்கவில்லை! எல்லா நிலையத்திலும் ‘கலர்’ விற்றார்கள். சில நிலையங்களில் ‘டீ,’ ‘காபி’ விற்றனர். “அடுத்த நிலையத்தில் பார்ப்போம் அடுத்த நிலையத்தில் பார்ப்போம்” என்ற முடிவு பலனைத் தரவேயில்லை! “சரி கொண்டுவந்திருக்கும் பிஸ்கத்தைத் தின்று காபியோ, டீயோ சாப்பிட்டு வையுங்கள்” என்றார் உணவு மந்திரி. ‘மாகோ’ நிலையத்தில் வண்டி நின்றது. அது ஒரு சந்திப்பு என்று பெயர்தானே தவிர சிறு நிலையமாகத்தான் இருந்தது. இறங்கி டீக் கடைக்குப் படையெடுத்தோம்.

‘டீயும்,’ ‘காபியும்’ மிகவும் நன்றாக இருந்தன. ஆனால் தேத்தண்ணீரில் தேயிலையும், காபியில் காபிப் பவுடரும் கடைசியில் மிஞ்சின! அப்படியே பாலில் கொட்டிச் சீனியைப் போட்டுக் கலக்கிக் கொடுத்தனர்! உலர்ந்த உதட்டிற்கு ஒரு சாந்தி!

வயிறு கடித்தாலும், வளமான, கவர்ச்சிகரமான இயற்கைக் காட்சி கண்களுக்கு விருந்தாயின. வண்டி வெகுநேரம் பிரயாணப்படுகிறது என்பதே தோன்றாமலிருந்தன.

“போல்காவலை”யில் கதலிப் பழமும், இளநீரும் கிடைத்தன. இளநீரை அங்கு ‘தவுளி’ என்று கூறுகின்றனர். அது ‘தகையழி’ என்பதன் திரிபாக இருக்குமோ? தகை



பயிற்சியாளர்கள் புது விளையாட்டுகளை ஆடக் கற்றுக்கொள்ளல்.

யழி, தகை — தாகத்தை அழி — அழிப்பது — தணிப்பது என்ற பொருளுடன் இருக்க வேண்டும். நாளடைவில் உச்சரிப்பால் மாறுபட்டு 'தவுளி' ஆயிருக்கவேண்டும்!

பொதுவாக நிலையங்களின் பெயர்களும், அவைகளின் உச்சரிப்பும் மலையாளம் மாதிரியாகவே இருக்கின்றன. சிங்களவரின் நடையுடை பாவனைகளும் மலையாள மக்கள் மாதிரியே இருக்கின்றன. வேறுபாடு அவர்களுடைய நிறத்தில் தான். மலையாள மக்கள் சிவப்பு. சிங்களவர் நேர் விரோதம்!

இப்போது சிங்களவர்கள் தங்களை நாட்டின் பழங்கால மக்கள் என்று கூறிக்கொண்ட போதிலும் அந்நாட்டுப் பழங்குடி மக்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. தமிழர் — தெலுங்கர் — மலையாளர் முதலியவர்களும், பழங்குடி மக்களும் சேர்ந்த ஒரு கலப்பே சிங்களவர்களாக இருக்க வேண்டும். இது என் முடிவல்ல. எண்ணம்!

இலங்கையில் சிங்களவர்களின் தொகையே அதிகமென்றாலும் தமிழர்கள், மூர்கள், மலேயா மக்கள், ஆங்கிலோ ஆசியர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்கள் பலர் வாழ்கின்றனர். பல மதங்கள் அங்கே இருக்கின்றன. என்றாலும் மக்கள் ஒன்றி வாழ்கின்றனர்.

சுமார் 12 மணிக்கு வண்டி 'மர்தானை நிலையத்தை அடைந்தது,

"அதோ! நம் இம்மானுவேல்!" என்று கூவினார் ஒருவர்.

அறிமுகமில்லாதவர்களுடன் பிரயாணப்பட்ட எங்களுக்கு நம்மவர் ஒருவரைக் கண்டவுடன் உள்ளம் பூரித்தது. எல்லோரும் அவரை மொய்த்துக் கொண்டோம்!

"எல்லோரும் சாமான்களைத் தயாராக எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். அடுத்தது 'கோட்டை' இறங்கவேண்டிய இடம் என்றார்.



பயிற்சியாளர்கள் புதுவிளையாட்டுகளை ஆடக் கற்றுக்கொள்ளல்.

மற்ற புகைவண்டி நிலையங்கள் சின்னஞ் சிறியதாக இருந்தாலும், மர்தானாவும், கொழும்புக் கோட்டையும் மிகவும் பெரிதாகவும், கவர்ச்சிகரமானதாகவும் இருந்தன. வண்டியை விட்டு இறங்கினோம். எத்தனையோ நாட்கள் பிரயாணப் பட்ட மாதிரியான களைப்பு எங்களிடம் காணப்பட்டது.

“சாமான்களை இங்கு வைத்து ஏதாவது காபி சாப்பிடுவதானால் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்!” என்றார் திரு. இம்மானுவேல்.

எதிரே இருந்த விடுதியை நோக்கிப் பறந்தோம். கொண்ட மட்டும் நிறைத்துக் கொண்டு வெளியே வந்தோம்.

“வெறுங் காபி சாப்பிடவா இவ்வளவு நேரம்?” என்றார் திரு. இம்மானுவேல்.

“வெறுங் காப்பியா? வயிறு புடைக்கச் சாப்பிட்டு வருகிறோம்” என்றேன்.

“ஐய்ய! அங்கே சாப்பாடு தயாரா இருக்கு. இங்கேயே வயிற்றை நிரப்பிட்டிங்களே! காப்பி தானே சாப்பிடச் சொன்னேன் நான்” என்றார் அவர்.

“நாசமாய் போச்சு! நீங்க நல்ல விளக்கமாச் சொல்லியிருக்கப்படாது! நாங்கதான் வண்டியெல்லாம் காஞ்சுக்கிட்டு வந்தவங்களாச்சே!”

‘‘சரி சரி! நடங்க’’.

‘சரிதான் தங்குமிடம் கிட்டேதான் இருக்கும் போலிருக்கு என்று எண்ணி நடந்தோம். இரண்டு பர்லாங் நடந்த பின் ‘குவாரன்டைன்’ ஆபீஸுக்குள் அழைத்துச் சென்றார். நாங்கள் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்ததும் அங்கு சென்று பதிவு செய்துகொள்ள வேண்டுமாம்! அது மாத்திரமல்ல, இலங்கையை விட்டு வெளியேறும் வரை தினமும் அங்கு சென்று உடல் நலத்துடன் இருப்பதைக் காட்ட வேண்டுமாம்! (தொடரும்)



யுவபுரியில் சமூகப் பொழுதுபோக்குப் பயிற்சிபெற்ற பயிற்சியாளர்கள்.



சென்னை-600 008

# செய்திகள்.

ஜனவரி 26 போடிநாயக்கனூர் பங்கஜம் இலவச பாடசாலையில் குடியரசு தின விழா வெகு சிறப்பாக கொண்டாடப் பட்டது. ஸ்தல M. L. A. ஸ்ரீ A. S. சுப்பராஜ் அவர்கள் கொடியேற்றி வைத்து மாணவர்களுக்கு சில அறிவுரைகள் கூறினூர். சாரணுசிரியர் ஸ்ரீ S. M. ராஜன் கொடிவணக்கம் மரியாதையை நடத்தினுர். பின்பு தலைமை ஆசிரியர் M. S. அப்புராவ் அவர்கள் வந்தனுேபசாரம் கூறிய பின் மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப் பட்டது.

## குடியரசு தினக் கொண்டாட்டம்.

### மதுரைமா நகரின் சாரண, வழி காட்டிகளின் மாபெரும் அணிவகுப்பு.

26உ ஜனவரியன்று மாலை 4-30 மணிக்கு மதுரை திலகர் சதுக்கத்தில் மதுரைமா நகர் சாரண வழி காட்டிகளின் அணிவகுப்பு ஒன்று குடியரசு தினத்தைக் கொண்டாடுவதற்காக நடைபெற்றது.

மாலையின் பொற்கதிரில், பொங்கும் மகிழ்ச்சிப் பெருக்கோடு, புன்னகையை முகத்தில் தேக்கி அழகிய உடைகளுடன் அணிவகுத்து சாரணர்களும், வழிகாட்டிகளும் நின்ற காட்சியைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தார்கள்.

அவ்வணிவகுப்புக்கு மதுரை நூற்பக செயலாட்சிப் பொறுப்பாளர் (Managing Director) திரு. ஜே. ஆர். மார்ஷல் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சரியாக மாலை 4-30 மணிக்கு திலகர் சதுக்கத்திற்கு வந்த திரு. ஜே. ஆர். மார்ஷல் அவர்களை ஜில்லா வழிகாட்டிகள் கமிஷனர் ஸ்ரீமதி டாக்டர் எடி அம்மையாரும் உதவித் தலைவர், மாவட்ட ஆணையாளர் டாக்டர் K. G. ராமபத்திரன் செயலாளர் திரு. K. L. N. கிருஷ்ணன் ஆகிய மூவரும் கொடிமரத்திற்கு அழைத்துச் சென்று அணிவகுப்புத் தலைவர் திரு. ஜே. டி. ஆசிர்வாதம் அவர்களை அறிமுகப்படுத்தினுர்கள்.

வானளாவிப் பறந்து இன்பப்பண் மீட்டக் கொடியை திரு. ஜே. ஆர். மார்ஷல் அவர்கள் பறக்கவிட, அணிவகுப்பு கொடிக்கு வணக்கம் செலுத்தியது.

மாவட்ட ஆணையாளரும், அணி வகுப்புத் தலைவரும், திரு. ஜே. ஆர். மார்ஷல் அவர்களை அணிவகுப்பைப் பார்வையிடக் கூட்டிச் சென்றுர்கள். ஆங்காங்கே தலைவரவர்கள் சாரணர்களையும், திரி சாரணர்களையும் வழிகாட் டிகளையும் அன்புடன் விசாரித்தார் கள். பின் தலைவரை

கொடிமரத்திற்குக் கூட்டிச் சென்று மாவட்டத் துணை ஆணையாளர் அவர்களையும் மற்றும் அணிவகுத்து நின்ற பணியாளர்களையும் (Officers) அறிமுகப்படுத்தினர்.

எழில்மிகுந்த காட்சி ஆரம்பமாகியது. தலைவர் அணிவகுப்பு வணக்கத்தை ஏற்க மேடையிலேறினர். வெள்ளமென சாரணப்படை நடை இசைக்கு (Marching Music) அடியெடுத்து வைத்து சிங்க ஏறுகளென்ன அழகுற, வழிகாட்டிகள் முன்செல்ல அணிவகுத்துச் சென்றார்கள்.

பின்னர் பல்வகை நடனங்கள், விளையாட்டுகள், கரகம், தீயுள் பாய்தல் முதலிய கண்கவர் காட்சிகள் நடைபெற்றன.

மாவட்ட ஆணையாளர் திரு. இராமபத்திரன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். அதில் சாரணீய இயக்கம் நாட்டிற்குத் தேவையான சேவைகளில் ஒன்று என்றும், அவ்வியக்கம் வளர பொதுமக்கள், அரசினர் மற்றும் திரு. ஜே. ஆர். மார்ஷல் போன்றவரின் ஆதரவு தேவை என்றும் கூறினர். சாரணர்களுக்கு மதுரையில் பாடிவீடு (Camping Place) இல்லையென்றும் அதற்குத் விழாத்தலைவரவர்கள் பாடி வீடு அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்கள்.

அதற்குப்பின் விழாத் தலைவர் திரு. ஜே. ஆர். மார்ஷல் தான் ஒரு சாரணராக இருந்ததாகவும், பின் கிருத்துவ இயக்கத்தைச் சார்ந்த சேவைப் படைப் பகுதியில் (Brigade) சேர்ந்து விட்டதாகவும் சொன்னர். சாதிபேதமற்று, உயர்வு தாழ்வற்று, எவ்வித வேறுபாடுமின்றி குழுமி இருக்கும் இச்சாரண அணிவகுப்பைக் கண்டு மன மகிழ்வதாகவும் கூறினர்.

பின் அணிவகுப்புத் தலைவர் திரு. ஜே. டி. ஆசிர்வாதம் விழாத் தலைவருக்கும் குழுமியிருந்தோருக்கும் நன்றி நவின்று, அணிவகுப்புக்கு ஏற்பட்ட செலவுகளைத் தன் சொந்த முறையில் தருவதாகச் சொல்லிய விழாத் தலைவர் திரு. ஜே. ஆர். மார்ஷல் அவர்களுக்குப் பாராட்டும் தெரிவித்தார்.

நாட்டுப்பண் பாடப்பெற்றது.

தலைவருக்கு வாழ்த்துக்கோஷம் போட்டவுடன் சாரண, வழிகாட்டி பெண்களுக்கு சிற்றுண்டி கொடுக்கப்பட்டது.

காரைக்குடி.

காரைக்குடி பாரதி படை 14—1—55ல் பொங்கல் விழாவை மாலை 4-30 மணிக்குக் கொண்டாடியது. திரு. P. L. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் பலர் விழாவின் முக்கியத்துவத்தைப் பற்றியும் சாரணர்களின் கடமைகள் பற்றியும் பேசினர்கள். பின்பு சாரணர்கள் தாங்கள் தயாரித்த பொங்கலைப் பொதுமக்களுக்கு வழங்கினர்கள்.

பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறறப்பட்டன.

(1) அடுத்த ஆண்டிலிருந்து பொங்கல் காரைக்குடியிலுள்ள எல்

லாப் படையினரும் இணைந்து பெரிய விழாவாகக் கொண்டாட வேண்டும். விழாவில் சாரணர்களின் போட்டி, விளையாட்டுகள், கேளிக்கைகள் நடத்த வேண்டும்.

(2) மாட்டுப் பொங்கல் நாளில் ஏழைகளுக்கு பலவித உதவிகள் செய்ய வேண்டும்.

### சிதம்பரம்.

சிதம்பரம் ஆருத்ரா தரிசனத்திற்காக ஒரு பணித்துறைப் பாசறை (Service Camp) ஒன்று ஜனவரித் திங்கள் 6ம் நாள் மாவட்ட ஆட்சிப் பொறுப்பாளர் திரு ஏ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. துணை மாவட்ட ஆணையாளர் (ADC) திரு. எஸ். இராமசாமி பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் 10 திரிசாரணர்களும் 90 சாரணர்களும் அப் பணித்துறைப் பாசறையில் பங்கெடுத்துக் கொண்டார்கள். விழாவின் மூன்று நாட்களிலும் திரிசாரணர்களும், சாரணர்களும் செய்த பணியை பொதுமக்கள் போற்றினுர்கள்.

### மாயூரம்.


துணை மாவட்ட ஆணையாளர் திரு. ஏ. வி. இராமநாதன் அவர்கள் மேற்பார்வையிலும், செயலாளர் திரு. எம். ஆர். இராஜகோபாலன் அவர்கள் தலைமையிலும் மாயூரம் பாரத சாரண வழிகாட்டிகள் கடமுக நாளில் துலாப படித்துறையில் தரங்கம்பாடி, சாம்பனுர் கோயில், தர்மபுரம், மாயூரம் பகுதிகளிலிருந்து சுமார் 80 சாரணர்கள் பணி செய்ய வந்திருந்தார்கள். காணுமற் போன 21 குழந்தைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவைகளில் ஒரு குழந்தை 1500 ரூபாய் பெருமான நகைகளை அணிந்திருந்தது. ஒன்பது கத்திரிக்கோல் கள்ளர்கள் (Pick-pocketers) கண்டுபிடிக்கப்பட்டுக் காவல் துறையினரிடம் (Police) ஒப்புவிக்கப்பட்டனர்.

### புதுக்கோட்டை.

புதுக்கோட்டை பாரத சாரண வழிகாட்டிகள் ஆறுவது குடியரசு தினத்தைக் கொண்டாடினுர்கள். சாரண, வழிகாட்டிகளின் அணிவகுப்பு, புதுக்கோட்டை பழய அரண்மனை விளையாடுமிடத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்றது. புதுக்கோட்டை அரசி பெண்கள் உயர்நிலைப்பள்ளி மேற் பார்வையாளர் திருமதி ராஜாம்பாள் அம்மை பி. ஏ. எல். டி., எம். இ. எஸ். நாட்டுக் கொடி உயர்த்தினுர்கள். புதுக்கோட்டைக் கல்வி வல்லுனர் திரு. பி. எஸ். எபினேசர் பி. ஏ. எல். டி. எம். இ எஸ். அவர்கள் அணிவகுப்பைப் பார்வையிட்டு, அணிவகுப்பின் மரியாதையை ஏற்ருர்கள். அங்கே குழுமியிருந்வ 300 சாரணர்களும் வழிகாட்டிகளும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்; சிலர் திரும்ப உறுதிப்படுத்திக் கொண்டனர். புதுக்கோட்டை கல்வி வல்லுனர் குடியரசு தினச் செய்தி கூறியதோடு மட்டுமன்றி உறுதிமொழி எடுத்துக்கொண்டதிற்கேற்ப சொல்முறையில் சாரணர்களும் வழிகாட்டிகளும் நடக்க வேண்டுமென்று பணிபுரிய அழைத்தார். துணைமாவட்ட ஆணையாளர் திரு. ஏ. டி. எம். பிரகாசம் பி. ஏ. எல். டி. வணக்கம் கூற, நாட்டுப் பண்ணுடன் அணிவகுப்பு முடிவுற்றது.

# புதிய தயாரிப்பு.

# பாரத் சாரணர் கொடி.



புதிய ட்ரேபாயில் சின்னத்துடன் கூடியது.

| | | |
|---|---|---|
| சிறியது (படைகளுக்கு) 3×4½ அடி | ரூ. | 7—8—0 |
| பெரியது (சங்கங்களுக்கு) 4×6 அடி | ரூ. | 10—0—0 |
| விசில் கயிறு காக்கி .... | ரூ. | 0—4—0 |

விபரங்களுக்கு: * * தபால் செலவு தனி.

**பாரத் சாரணர் சங்கம், 41, வடக்காவணிமூல வீதி, மதுரை.**

---

## விற்பனைக்குத் தயார்!

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| பாலவீரர் தேர்ச்சிக் குறிப்பு 50 பாரம் | .... | 1—0—0 |
| சாரணர் தேர்ச்சிக் குறிப்பு 50 பாரம் | .... | 1—0—0 |
| புல்புல் சிறுமிகள் தேர்ச்சிக் குறிப்பு 50 பாரம் | .... | 1—0—0 |
| படைத் தலைவர்கள் ரிக்கார்டு 50 பாரம் | .... | 1—12—0 |
| பாரத் சாரணர் பிளாக் நிர். 1 | .... | 3—0—0 |
| ஷை நிர். 2 | .... | 2—0—0 |
| சாரணர் பாட்டுக்களும், சிம்ம நாதங்களும் | .... | 0—6—0 |
| பண்டித ஸ்ரீராம் பாஜபாய் போட்டோ | ... | 0—4—0 |
| ஸ்கார்பு வளையம் (மூங்கிலில் அழகிய சின்னம் பொறித்தது) | | 0—3—0 |
| ஸிக்ஸர் கைவளையம் | ... | 0—4—0 |
| கமிஷனர் ஸ்கார்ப் (பர்ப்பிள்) | ... | 1—8—0 |
| ஜில்லா ஸ்கவுட்மாஸ்டர், கப்மாஸ்டர், ரோவர் லீடர் ஸ்கார்ப் (மஞ்சள்) | .... | 1—8—0 |
| பிரசிடெண்ட், காரியதரிசி, மெம்பர்கள் ஸ்கார்ப் (பச்சை) | | 1—8—0 |
| சாரணர் காக்கி துணி பெல்ட்டு | .... | 1—4—0 |
| பாரத் சாரணர் டைரி, 1955 (தமிழ்) | .... | 0—9—0 |

கௌரவ காரியதரிசி, பாரத் சாரணர் சங்கம்,
41, வடக்காவணிமூல வீதி, மதுரை.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# பாரத் சாரணர் நாட்குறிப்பு.

# 1955

தமிழில் சாரணச் சிறுவர், சிறுமிகளுக்கு வேண்டிய

★ சாரணியக் குறிப்புக்களோடும் ★

நேஷனல் ஆர்கனைசிங் கமிஷனர்

திருவாளர் ஸ்ரீராம் பாஜ்பாய் அவர்களின்

ஆசிச்செய்தியோடும் வெளி வந்துள்ளது.

ஏறக்குறைய 220 பக்கங்களுடையது.

தபால் செலவு பிரத்தியேகம்.

இதன் விலை அணு ஒன்பது.

கிடைக்குமிடம்:-

மதுரை ஜில்லா பாரத் சாரணர் சங்கம்,

41, வடக்காவணிமூல வீதி, மதுரை.

# ரிஸோபாம்.

தலைவலி, ஜலதோஷம், நரம்புவலி, தசைநோய்,
பல்வலி முதலியவைகளுக்கு கைகண்ட
மருந்து. மேற்கண்டவைகளுக்கு
ரிஸோபாம் நல்லகுணமளிக்கும்.

தயாரிப்பு:

லூதர்ன் ரிஸர்ச் லாபரட்டரி,


பூர்ண விநியோகஸ்தர்கள்:

## SP. M. மெடிக்கல் மார்ட்,

15, கீழச்சித்திரை வீதி, :: :: மதுரை.

Edited & Published by J. D. Asirvatham for The Bharat Scouts & Guides, Madurai District. Printed by Sri Krishna Press, 1, Manjanakara Street, Madurai.

# SAVE ON TYRES...




# RETREAD

Sundaram Industries retread all populer passenger car and truck tyres using full circle moulds and modern technique. Their ten years retread experience is at your service.

Insist on retreading your tyres with full circle moulds with new shoulders and nonskid treads.

## SUNDARAM INDUSTRIES LTD.

( PUDUKKOTTAI. (UNIT OF T. V. S.)

Regd. No. M. 6116.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்.

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்.

போன் 250 (4 லைன்) மதுரை. தந்தி: "ஹார்வி"

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்.

| | | |
|---|---|---|
| 5,00,000. நூற்கும் கதிர்கள் | நாங்கள் சப்ளை செய்வது | நெம்பர் 80 வரை நூல்கள். |

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலிய வைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள். மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

போன்: 420 (4 Lines) மதுரை. தந்தி: "ஹார்வி"